# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : சமூகப் பிரச்சனைகள்

பகுதி : **எழுத்தறிவின்மை**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# எழுத்தறிவின்மை

**முன்னுரை:**

தற்போதைய உலகில் எழுத்தறிவின்மையானது இந்தியாவின் மிகப்பெரிய பிரச்சினையாகும். இத்தகைய எழுத்தறிவின்மையானது வறுமை, மக்கள்தொகை வெடிப்பு, வேலையின்மை, குழந்தைத்தொழிலாளர் முறை உருவாக வழிவகுக்கிறது

எழுத்தறிவின்மையானது நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு பெரிய முட்டுக்கட்டையாக உள்ளது. பெரும்பான்மையான இந்திய மக்களுக்கு எழுத்தறிவின்மையானது இன்னும் இடையூறாக உள்ளது

**எழுத்தறிவு கணக்கீடு**

ஒரு மனிதர் ஏதேனும் இந்திய மொழியில் எழுதவும், வாசிக்கவும் தெரிந்த தன்மை எழுத்தறிவு எனப்படும்.

எழுத்தறிவு விகிதம் - (2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு)

- ஆண் - 82.14%
- பெண் - 65.46%
- மொத்தம் - 74.04%

**சுதந்திரத்திற்கு பின்பு தமிழ்நாட்டின் கல்வி நிலை**

தமிழ்நாடு - கல்வியறிவில் இந்தியாவின் ஏழாவது மாநிலம்

கல்வியறிவு விகிதம் - 80.11%

- ஆண் - 86.8%
- பெண் - 73.4%

941 – 16.2%, 1971 – 45.4%, 2011-80.11%

**இந்தியாவின் கல்வி மேம்பாட்டு நிலை:**

**பிரிட்டிஷ் வருகைக்கு முன்னர்**

1. கல்வியறிவு விகிதம் - 3.2%
2. கீழ்தட்டு மக்களுக்கு கல்வியறிவு மறுக்கப்பட்டது.
3. மேல்தட்டு மக்களுக்கு குருகுலக்கல்வி வழங்கப்பட்டது
4. பெண்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டது.

**பிரிட்டிஷ் ஆட்சியின் போது**

1. பட்டயச்சட்டம் - 1813 - 1 இலட்சம் கல்விக்காக ஒதுக்கப்பட்டது.
2. மெக்காலே குழு (1934) - ஆங்கிலம் அலுவலக மொழியாக்கப்பட்டது.
3. உட்ஸ் கல்வியறிக்கை (1854)
4. ஹண்டர் குழு அறிக்கை (1882)
5. சார்ஷண்ட் திட்டம் (1944)

இத்தகைய திட்டங்களினால் 1932ல் கல்வியறிவு விகிதம் 12.2% ஆக அதிகரித்தது.

**சுதந்திரத்திற்கு பின்பு**

1. தேசிய கல்விக் கொள்கை (1986)
2. மதிய உணவுத்திட்டம் (1995)
3. கல்வி உரிமைச்சட்டம் (2009)
4. சர்வ சிக்ஷ அபியான் (2001-02)

**எழுத்தறிவின்மைக்கான காரணங்கள்**

1. பரவலாகியுள்ள வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை
2. மிக விரைவான மக்கள்தொகை பெருக்கம், வளப் பற்றாக்குறையும்.
3. கல்விக்காகும் அதிகபட்ச செலவு
4. ஏற்கனவே படித்த மக்களுக்கு வேலையில்லா நிலை.
5. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவு.
6. கல்வி உதவித் தொகை, ஊக்கத் தொகை போன்றவை கிராமப்பகுதிகளை சென்றடைவதில்லை.
7. குடும்பத்தில் நிலவும் ஏழ்மைநிலை
8. பெற்றோர்களின் குறைந்த கல்வி
9. அரசின் குறைந்த கல்வி நிதி ஒதுக்கீடு
10. ஆரம்ப பள்ளிகள் திறம்பட செயல்படாமை
11. சமத்துவமின்மை
12. பெண் குழந்தைகளை படிக்க வைப்பதில் ஏற்படும் தடைகள்.

**நாட்டின் வளர்ச்சியில் எழுத்தறிவின்மை யின் பொருளாதார தாக்கம்**

1. அடிப்படைத் தகவல்களைக் குறைவாக புரிந்து கொள்ளும் மற்றும் உள்வாங்கும் திறன் உருவாதல்

2. இளநிலை பட்டதாரிகளின் வேலையின்மை விகிதம் 2 முதல் 4 மடங்கு அதிகமாதல்.
3. குறைந்த வருமானம்
4. குறைவான தரமுள்ள வேலை வாய்ப்புகள்
5. வாழ்க்கை முழுவதும் கற்கும் திறன் மற்றும் தொழல் மேம்பாட்டுத்திறன் குறைதல்
6. நிலையற்ற பொருளாதார நிலை
7. குடும்பங்களுக்குள்ள நபர்களிடையே கல்வியைப் பற்றிய குறைவான மதிப்பீடு உருவாதல்
8. குறைவான சுயமதிப்பீடு
9. எழுத்தறிவின்மை உடையோர், சிலர் வேலைபார்க்கும் இடங்களில் நடைபெறும் விபத்தினால், அக்காயங்கள் சரியாக பல நாட்கள் ஆகின்றன. இதற்குக் காரணம் சரியான மருத்துவ முறைகளை மேற்கொள்ளாததே ஆகும்.
10. கல்வியறிவானது ஒவ்வொரு தனிமனிதனின் ஆயுதம் ஆகும்.

**கல்வி கற்பதை வலியுறுத்தும் அரசியலமைப்பில் விதிகள்**

**விதி 15**

தீண்டாமை ஒழிப்பு

**விதி 21 A (அடிப்படை உரிமை)**

6 முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் கட்டாய மற்றும் இலவசக் கல்வியை பெற வேண்டும் என்பது அவர்களின் அடிப்படை உரிமை.

இவ்விதி 86 வது அரசியலமைப்புச் சட்டதிருத்தம் 2002 ன் படி சேர்க்கப்பட்டது.

**விதி 30(1)**

சிறுபான்மையினர் கல்வி நிறுவனங் -களை நிறுவ உரிமை.

**விதி 45 (அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள்)**

குழந்தைகள், 6 வயதிற்குட்பட்டோர் களின் கல்வி மற்றும், பாதுகாப்பினை உறுதி செய்தல் அரசின் கடமை.
86வது சட்டத்திருத்தப்படி (2002) சேர்க்கப்பட்டது.

### விதி 51 A(K) (அடிப்படைக் கடமை)

6 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு, கல்வி கற்பதற்கான வாய்ப்பினை வழங்குவது ஒவ்வொரு இந்தியக் குடிமகனான பெற்றோர் மற்றும் காப்பாளரின் கடமையாகும்.

86 வது சட்டத்திருத்தம் (2002) ன் படி சேர்க்கப்பட்டது.

### விதி 51(h)

விஞ்ஞான நோக்கு, மனிதாபிமானம், ஆராய்ந்து சீர்திருத்தம் செய்யும் மனநிலை முதலியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

### தேசிய கல்விக் கொள்கை:

1964 - கோத்தாரி கல்விக்குழு அமைப்பு

1966 - அறிக்கை சமர்ப்பித்தல்

1968 - தேசியக் கல்விக் கொள்கை கொண்டு வரப்பட்டது

1986 - 2வது கொள்கையாக புதிய கல்விக் கொள்கை கொண்டு வரல்.

இந்த தேசிய கல்வி கொள்கையானது பின்வருவனவற்றை கொண்டு தேசிய கல்வி அமைப்பு முறையை உருவாக்கும் காரணத்தோடு ஆரம்பிக்கப்பட்டது.

- ஒவ்வொரு படிநிலைகளில் இறுதியினும் ஒப்பிட்டு பார்க்க ஏதுவான ஒரு பாடத்திட்டத்தை உருவாக்குதல்.
- பாடத்திட்டத்தில் சமூகம் மற்றும் கலாச்சாரத்தின் ஒருங்கிணைப்பு கண்ணோட்டத்தினை வலுப்படுத்த வேண்டும்.
- சமத்துவ, ஜனநாயக மற்றும் மதசார்பற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு அவசியமான ஒருஅமைப்பு முறையை ஏற்படுத்துவது.
- சமுதாயத்தில் பின்தங்கிய பகுதியினரின் நிலையை சமப்படுத்துவது மற்றும் கல்வி முறையை தொடர்பு கொள்வதில் சமநிலையை ஏற்படுத்துவது.
- கல்வி முறையில் மாற்றம்.
- ஏற்றத்தாழ்வுகளை குறைப்பது.
- அனைவருக்கும் தொடக்கக்கல்வி.
- வயது வந்தோர்க்கான கல்வி.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி.

- 1 + 0 + 2 + 3 என்ற பொதுவான கல்வி முறையை நாடு முழுவதும் ஏற்படுத்துவது.
- முதல் 10 ஆண்டு பள்ளிக் கல்வியில் 5 ஆண்டுகள் ஆரம்ப கல்வியாகவும், 3 ஆண்டுகள் நடுநிலைப்பள்ளி கல்வியாகவும், 2 ஆண்டுகள் உயர்கல்வியாகவும் இருத்தல் வேண்டும்.
- 14 வயது வரை இலவச மற்றும் கட்டாய கல்வி.

**தேசிய வயது வந்தோர் கல்வி திட்டம்**

1. இத்திட்டம் அக்டோபர் 2, 1978 ல் தொடங்கப்பட்டது.
2. கல்வி வழங்குதலும், எழுத்தறிவற்ற மக்களின் எழுத்தறிவை மேம்படுத்துவதும் (குறிப்பாக 15 முதல் 35 வயதிற்குட்பட்டோர்) இதன் நோக்கமாகும்.
3. மக்களிடம், அரசின் திட்டங்கள், சட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து விளக்குவதும், அதனுடைய செயல்பாட்டுக்கும் உதவுதல்.
4. இந்தியாவில் எழுத்தறிவற்றோர் விழுக் காட்டில் அதிக அளவு காணப்படும் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் போன்றோரின் கல்வி தரத்தை அதிகரித்தல்.

**ஊரக (கல்வி) எழுத்தறிவு செயல் திட்டம்**

1. மே 1986 ல் தொடங்கப்பட்டது.
2. நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
3. ஒவ்வொருவரும் ஒருத்தருக்கு கற்றுத் தருதல் (Each one teach one) என்ற நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டது
4. மத்திய அரசு இதற்கான செலவை ஏற்றுக் கொண்டது, மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேசங்கள் திட்டத்தினை செயல் படுத்தின.

**நோக்கங்கள்**

1. எழுதுவதற்கும், வாசிப்பதற்குமான திறமைகளை வளர்த்தல்.
2. கற்போரிடம் அவர்களுக்கான உரிமைகள், கடமைகள், அரசின் பல்வேறு சமூக பொருளாதார திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**தேசிய எழுத்தறிவு திட்டம் (1988)**

எழுத்தறிவில் மிகப் பெரிய சாதனைகளை புரியும் பொருட்டு, தேசிய எழுத்தறிவு திட்டம் மே, 1988 ல் தொடங்கப்பட்டது.

15 முதல் 35 வயதிற்குட்பட்டவர் களுக்காக, எழுத்தறிவு செயல் திட்டத்தை கொண்டு வந்தது.

**தேசிய எழுத்தறிவு திட்டத்தின் இரு கூறுகள்**

1. மொத்த எழுத்தறிவு செயல்பாடு (Total Literacy Campaign)
2. பின் எழுத்தறிவு செயல்பாடு (Post Literacy Campaign)

**ஜன் சிக்ஷன் சன்ஸ் தன் (JSS)**

1. இவை முறைசாரா தொழிற்கல்வி வழங்கும் கல்வி நிறுவனங்கள் ஆகும்.
2. வயது வந்தோருக்கு கல்வி மற்றும் தொழிற்கல்வியை தருவதே இதன் நோக்கமாகும்.

**சக்ஷார் பாரத் திட்டம் (SBM)**

1. மனிதவள மேம்பாட்டுத் துறை, மற்றும் இந்திய அரசு இணைந்து செப்டம்பர் 8, 2009 அன்று (உலக எழுத்தறிவு நாள்) தொடங்கப்பட்டது.
2. வயது வந்தோர் கல்வியை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, முறையான கல்வியை பெறாதவர்களின் எழுத்தறிவை மேம்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்டது.

**அனைவருக்கும் கல்வித் திட்டம் (SSA)**

1. சர்வ சிக்ஷா அபியான் என்பது அனைவருக்கும் ஆரம்பக் கல்வி கிடைக்கச் செய்யும் திட்டமாகும்.
2. அனைத்துக் குழந்தைகளும் தங்களது கல்வித் திறமைகளை வளர்த்துக் கொள்ள இது வாய்ப்பளிக்கிறது. மேலும் நாடு முழுக்க மக்களுக்கு ஏற்ற தரமான அடிப்படைக் கல்வி இத்திட்டத்தில் உறுதி செய்யப்படுகிறது.

**சிறப்பம்சங்கள்**

1. அடிப்படையிலிருந்து சமூக நீதியை ஊக்கப்படுத்தும் வாய்ப்பினை வழங்குகிறது.
2. நாடு முழுமைக்குமான அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்பது அரசியல் துணிவின் வெளிப்பாடாகும்.
3. மத்திய, மாநில, உள்ளாட்சி அரசு அமைப்புகளிடையே ஒரு கூட்டுறவை ஏற்படுத்துகிறது.
4. ஒரு மாநிலம் தன்னுடைய சொந்த தொலை நோக்கு திட்டம் கொண்ட கல்வியை அறிமுகப்படுத்த ஒரு வாய்ப்பாகும்.

5. பஞ்சாயத்துராஜ் அமைப்புகள், பள்ளி மேலாண்மைக் குழுக்கள், கிராம, நகர குடிசைப்பகுதி கல்விக் குழுக்கள், பெற்றோர் ஆசிரியர் கழகங்கள், தாய் - ஆசிரியர் அமைப்புகள், பழங்குடியின தன்னாட்சி கவுன்சில்கள் மற்றும் மற்ற அடிமட்ட ஆரம்பக்கல்வி பள்ளி நிர்வாக அமைப்புகள் தீவிரமாக பங்காற்றுகின்றன.

**நோக்கம்:**

1. 2010க்குள் 6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் பயனுள்ள ஆரம்பக் கல்வியை வழங்குதல்.
2. தீவிரமான சமுதாய பங்களிப்பினை பள்ளி நிர்வாகத்தோடு இணைந்து மேற்கொள்வதன் மூலம் சமூக, வட்டார மற்றும் பாலின வேறுபாடின்மையை கட்டமைக்க முடிகிறது.
3. இயற்கையான சூழலுடன் இணைந்து குழந்தைகள் ஆன்மீக ரீதியாகவும், பொருளியல் ரீதியாகவும் தங்களது ஆற்றலை வளர்த்துக்கொண்டு நிபுணர்களாக மாறுவதற்கான கல்விக்கு அவர்களை அனுமதிப்பது.
4. மதிப்புக் கல்வியை அறிமுகப்படுத்துவதன் மூலம் தனக்கென சுயநலத்தோடு வாழாமல், மற்றவர் நலனிலும் அக்கறை செலுத்தும் குழந்தையாக வளர்ப்பதற்கான வாய்ப்பினை இக்கல்வி கற்றுத் தருகிறது.
5. 0-14 வயது வரை குழந்தைகளின் நலன் மற்றும் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவத்தை உணரவைப்பது.

**கொள்கைகள்:**

1. பள்ளியிலுள்ள அனைத்துக் குழந்தைகள், கல்வி உறுதி மையங்கள், மாற்றுப் பள்ளிகளில் "பள்ளிக்குத் திரும்புவோம்" முகாம் 2003இல் ஆரம்பிக்கப்பட்டது.
2. 5 வயது நிரம்பிய அனைத்துக் குழந்தைகளும் 2007க்குள் ஆரம்பப் பள்ளியில் சேர்க்க வேண்டும்.
3. அனைத்துக் குழந்தைகளும் 2010க்குள் அடிப்படை ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
4. ஆரம்பக்கல்வி தரமானதாகவும், வாழ்க்கைக்கான கல்வியாக அமையும் நோக்கத்தில் வலுப்படுத்த கவனம் செலுத்த வேண்டும்.
5. அனைத்து சமூக பாலின வேறுபாடுகள் ஆரம்ப நிலையில் 2007க்குள் களையப்பட வேண்டும்.

**கல்வி உரிமைச் சட்டம்**

சட்டவிதி 21- A மற்றும் கல்வி உரிமைச் சட்டம் 2010ம் ஆண்டு ஏப்ரல் 1ம் நாள் நடைமுறைக்கு வந்தது. கல்வி உரிமைச் சட்டத்தின் தலைப்பில் "இலவச மற்றும் கட்டாய" என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டன.

**இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் கூறுவது:**

1. 6 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி பெறுவது அடிப்படை உரிமையாக்கப்பட்டுள்ளது.
2. தொடக்கக்கல்வி பெறுவது குடிமக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமயாகும்.

இச்சட்டம் அரசு, உள்ளாட்சி அதிகாரிகள், பெற்றோரின் கடமைகள் மற்றும் பொறுப்புகளையும், இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்குவதில் மத்திய மாநில அரசுகளின்

1. நிதிப் பங்கீட்டினையும் தெளிவாக எடுத்துரைக்கிறது.
2. இச்சட்டம் ஆசிரியர் மாணவர் விகிதம் ஒவ்வொரு பள்ளியிலும் முறையாகப் பின்பற்றுவதை உறுதி செய்கிறது. ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதில் நகர கிராம வேறுபாடு கூடாது. ஆசிரியர்களை மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, உள்ளாட்சி, சட்டமன்ற பாராளுமன்றத் தேர்தல் மற்றும் இயற்கைப் பேரிடர் தவிர மற்ற கல்வி அல்லாத பணிகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்தக் கூடாது எனத் தடை விதிக்கிறது.
3. முறையான பயிற்சி பெற்ற, தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட வேண்டியதை இச்சட்டம் கூறுகிறது.
4. உடல் ரீதியிலான தண்டனை, மனரீதியிலான துன்புறுத்தல்கள்
5. குழந்தைகளை சேர்ப்பதில் வடிகட்டும் தேர்வு முறை
6. அதிகக் கட்டணம்
7. ஆசிரியர்கள் தனியாக பயிற்சி (Tuition) வகுப்பு எடுத்தல்
8. பள்ளியிலிருந்து இடைநிற்றல்
9. ஆகியவற்றை இச்சட்டம் தடை செய்கிறது.
10. இச்சட்டம் பயமில்லாத கல்வி, குழந்தைகளை மையமிட்ட கல்வி, பன்முகத் திறமைகளை குழந்தைகளுக்கு வளர்த்தல், அறிவுக் கட்டமைப்பு ஆகியவற்றை உறுதி செய்கிறது.

11. அரசுப் பள்ளிகள் இலவசக் கல்வியை அனைத்துக் குழந்தைகளுக்கும் அளிக்கும் பொருட்டு தனியார் பள்ளிகள், பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கு குறைந்தது 25% கட்டணமாகவோ அல்லது கட்டணமின்றியோ அளிக்கலாம்.

**சட்டவிதி**

1. 51 A ஒவ்வொரு தந்தை அல்லது காப்பாளர்கள் தங்கள் குழந்தை களுக்குத் தேவையான தொடக்கக் கல்வியை வழங்குவதற்கு அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்க வேண்டும்.
2. கல்வியுரிமை மறுக்கப்பட்டால் பாதிக்கப்பட்ட நபர் நேரடியாக பூர்த்தி செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு மூலம் சட்ட விதி 32 மற்றும் 226ன் படி உச்ச நீதிமன்றத்தையோ உயர் நீதிமன்றத்தையோ அணுகலாம்.

**ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷ அபியான் (RMSA)**

1. இடைநிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துதல் மற்றும் அனைவருக்கும் கிடைக்கும் படிச் செய்தல்.
2. மார்ச் 2009 ல் தொடங்கப்பட்டது.
3. இத்திட்டத்திற்கான, மத்திய மற்றும் மாநில அரசின் செலவு முறையே 75 : 25 (வடகிழக்கு மாநிலங்களில் 90: 10)
4. 10 ஆம் வகுப்பு வரையிலான கல்விக்கு உத்திரவாதம் அளிக்கிறது.

சர்வ சிக்ஷ அபியான திட்டத்தின் பயனாக பல லட்சம் குழந்தைகள் எட்டாம் வகுப்பு வரை பயின்றுள்ளதால், இடைநிலைக் கல்விக்கான தேவை மிக வேகமாக அதிகரித்துள்ளது.

**நோக்கம்**

1. குடியிருப்பு பகுதியிலிருந்து 5 கி.மீ தொலைவிற்குள் இடைநிலைக் கல்வி நிலையத்தையும், 7 முதல் 10 கி.மீ தொலைவிற்குள் மேல்நிலைக் கல்வி நிலையத்தையும் அமைத்தல்.
2. இடைநிலைக் கல்வியானது, 2017 ம் ஆண்டிற்குள் கிடைக்கும் படிச் செய்தல்.
3. அனைவரும் (இடைநிலைக் கல்வி) கற்றறிந்த நிலையை 2020 க்குள் ஏற்படுத்துதல்.
4. பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவினருக்கு அதிக முக்கியத்துவம் வழங்குதல்.
5. குழந்தைகள் நலிவடைந்த சமூகத்தினர், கல்வியில் பின்தங்கிய மக்கள் போன்றோர் இடைநிலைக் கல்வி பெற வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.

**கல்வி கற்கும் உரிமை சட்டம் 2009**

1. இந்திய கல்வி முறையை வலுவாக்க கொண்டு வரப்பட்ட இச்சட்டம் ஒரு மைல்கல்.
2. இந்திய நிலப்பகுதியில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் தொடக்க கல்வி பெறுதல் இச்சட்டம் மூலம் அவசியமாகிறது.
3. இதன்மூலம் கல்வி ஒவ்வொரு இந்தியனின் அடிப்படை உரிமையாகிறது.
4. 6 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வியை அடிப்படை உரிமையாக்கிய சட்டத்திருத்தம் - 86 வது சட்டத் திருத்தம் 2002 ஆகும்.
5. இதன்படி அனைத்து அரசுப் பள்ளிகளிலும் இலவசக் கல்வி வழங்கப்படுகிறது.
6. தனியார் பள்ளிகளில், மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் 25 சதவீத பேருக்கு இலவசக் கல்வி வழங்க வேண்டும்.

**சிறப்பம்சம்**

1. அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாய இலவச கல்வி தொடக்க கல்வியை (எட்டாம் வகுப்பு) முடிக்கும் வரை எந்தக் குழந்தையையும், பள்ளியை விட்டு வெளியே அனுப்புவதோ அல்லது தேர்வுகளில் தோல்வியடையச் செய்வதோ கூடாது.
2. வயது சான்றிதழ் இல்லை என்ற காரணத்தால் குழந்தைகளின் கல்வி மறுக்கப்படக் கூடாது.
3. தொடக்கக் கல்வி (எட்டாம் வகுப்பு) முடித்தற்கான சான்றிதழ் வழங்கப்பட்ட வேண்டும்.
4. ஆசிரியர் - மாணவர் விகிதம் சரியான அளவில் பின்பற்றப்பட வேண்டும்.
5. அனைத்து தனியார் பள்ளிகளிலும், 25 சதவீத இடங்களை, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்காக ஒதுக்க வேண்டும்.
6. ஐந்து வருடங்களுக்குள் தேவையான கல்வித் தகுதியை அனைத்து ஆசிரியர்களும் பெற்றிருத்தல் வேண்டும்.
7. 3 வருடங்களுக்குள், அனைத்து பள்ளிகளும் நிர்ணயிக்கப்பட்ட கட்டமைப்பு வசதிகளையும் பெறுதல் வேண்டும்.

## எழுத்தறிவின்மையை ஒழிக்கும் அரசின் வழிமுறைகள்

1. நமது அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக கல்வி உரிமையை ஆக்கியது.
2. பல்கலைக்கழக கல்விக் குழு 1978ம் ஆண்டு உருவாக்கப்பட்டு தாய்மொழிக்கல்வியின் மூலம் அனைவரின் கல்வி நிலை உயர வழிவகுத்தது.
3. 1968-ன் கல்விக் கொள்கையின் மூலம் 10 + 2 + 3 கல்வி முறையை புகுத்தியது.
4. 1986-ன் தேசிய கல்விக் கொள்கை மூலம் கட்டாயத் தொடக்கக் கல்வியை வலியுறுத்தியது.
5. 1992-ன் தேசிய கல்விக் கொள்கை மூலம் கரும்பலகைத் திட்டம் உருவாக்க பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதி, ஆசிரியர்களின் நியமனம் ஆகியவற்றை மேம்படுத்தியது.
6. 1991-ன் பேராசிரியர் டேவ்ஸ் கல்வி முறை குறைந்தபட்ச கல்வி முறையை அறிமுகம் செய்யப்பட்டது.
7. 1988- தேசிய எழுத்தறிவு இயக்கம் மூலம் 2007க்குள் 75% எழுத்தறிவு நிலையை எட்ட, 15 - 35 வயதினருக்கு செயலறிவுக் கல்வி வழங்கல்.
8. 1994-ன் மாவட்ட தொடக்கக் கல்வித்திட்டம் மூலம் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை வலுவூட்டல் நோக்கங்களைக் கொண்டு, சுமார் 15,000 பள்ளிகள் துவங்கப்பட்டன.

## வயதுவந்தோக்கான கல்வித்திட்டங்கள்:

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கருத்தாள் மாற்றம்.

### அடிப்படை கல்வி (1947 வரை):

1. இரவு நேர பள்ளிகள் விரிவாக்கம்
2. இது பாரம்பரிய கல்வி அணுகுமுறை உடையது.
3. பயிற்சி காலம் 2 ஆண்டுகள்.
4. இதன் அடிப்படையில் 1938 - 39 இல் தூதரக பிராந்திய கல்வி பிரச்சாரங்கள் தொடர்ந்து பல நடைபெற்றது.

**குடிமை கல்வி (1949 - 1966)**

வாழ்க்கை சம்பந்தப்பட்ட அணுகுமுறை உடையது.

1. சமுகக் கல்வியின் மேல் கவனம்.
2. 1952-ல் சமுதாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டது.
3. இக்கருத்தானது முதல் மற்றும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களின் போது இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**செயல்பாட்டு கல்வி (1967 - 1977)**

1. தொழிற்கல்வியை அடிப்படையாக கொண்டது.
2. கல்வியானது கற்பரின் தொழிலோடு இணைக்கப்பட்டு அவரின் முன்னேற்றத்தோடு நேரிடையாக தொடர்பு கொண்டது.
3. இது விவசாயிகளுக்கான கல்வி மற்றும் ஷிராமிக் வித்யபீடம் Shramic Vidyapeeth ஆகியவற்றின் மீது கவனம் முடையது.
4. முதலாவதாக மூன்று மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு அடுத்த 10 ஆண்டுகளில் விரிவுப்படுத்தப்பட்டு 1977 இல் 144 மாவட்டங்களில் கொண்டுவரப்பட்டது.

**முன்னேற்றம் சார்ந்த கல்வி (1978 முதல்)**

1. சமுக மாற்றத்தை அடிப்படையாக கொண்டது.
2. கல்வியானது ஒரு மனிதனின் சுதந்திரமான செயல்பாட்டிற்க்கும் அவனது முழுவளர்ச்சிக்கும் காரணமானது
3. முழு கல்வி இயக்கத்தின் மேல் கவனம்.
4. 1978 ஆம் ஆண்டு அரசு தேசிய வயதுவந்தோர்க்கான கல்வி திட்டத்தை வகுத்தது.

**தேசிய வயது வந்தேர்க்கான கல்வி திட்டம்:**

Oct 2, 1978 இல் அறிமுகப்படுத்தப்பட்டது,

**கொள்கை :**

1. கல்வியை வழங்குவது மற்றும் கல்வி அறிவு அற்றவர்களுக்கு கல்வியை பரப்புவது.
2. **இலக்கு குழு:** 15 - 35 வயது வரை உள்ளவர்களுக்கு

3. இது மத்திய, மாநில, யூனியன் பிரதேச நிர்வாகங்கள், தன்னார்வ அமைப்புகள், பல்கலைகழகங்கள், கல்லூரிகள் (ம) இளைஞர் அமைப்புகளை இணைந்த ஒரு கூட்டமைப்பு ஆகும்.

**நோக்கங்கள்:**

1. கல்வி அறிவற்ற இலக்கு குழுக்களுக்கு கல்வி திறனை அளித்தல்.
2. செயல்பாட்டு கல்வி முன்னேற்றம்.
3. அரசின் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
4. பெண்கள், தாழ்த்தப்பட்டோர், மற்றும் பழங்குடியினர் மற்றும் நலிந்த பிரிவினர்களுக்கான கல்வியின் மீது சிறப்பு முக்கியத்துவம் அளித்தல்.

**கிராமப்புற செயல்பாட்டு கல்வித் திட்டம்:**

1. இது தேசிய வயது வந்தோர்க்கான கல்வி திட்டத்தின் துணைத்திட்டமாகும்.
2. 1986-மேல் அறிமுகப்படுத்தப்படாது.
3. மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களால் நடைமுறைபடுத்தப்பட்டாலும் இது மத்திய அரசால் முழுமையாக நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**நோக்கங்கள்:**

1. பயிற்சி பெறுபவர்களுக்கு படிப்பது மற்றும் எழுதுவதற்கான திறமைகளை மேம்படுத்துவது.
2. பயிற்சியாளர்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
3. பல்வேறு சமூக பொருளாதார திட்டங்களின் பயன்களை ஒருங்கே வழங்குவது.

**கொள்கை முறை:**

1. ஒவ்வொருவரும் - ஒவ்வொருவரை பயிற்றுத்தல்.
2. கல்லூரி மற்றும் பல்கலைகழகத்தில் உள்ள தன்னார்வ மாணவர்களை ஈடுபடுத்துவது:
3. திட்டமானது பயிற்சியாளர்களின் தேவை மற்றும் மொழியினை அடிப்படையாக கொண்டு வடிவமைக்கப்பட்டது.

**நடைமுறைகள்:**

1. தன்னார்வ மாணவர்களை பயிற்றுவிக்க ஒரு தலைமை பயிற்றுனரை தேர்ந்தெடுப்பது.
2. 15 முதல் 35 வயது வரை உள்ளவர்களில் கல்வி அறிவு அற்றவர்களை அடையாளம் காண்பது.
3. தன்னார்வ மாணவர்களையும், கல்வி அறிவற்றவர்களை ஒன்றிணைப்பது.
4. ஒவ்வொரு தன்னார்வ மாணவர்களுக்கு ஒரு செயல்பாட்டு எல்லையை வரையறை செய்வது.

**திட்டத்தினை காண்காணிப்பது:**

1. அனைத்து வகையான துறைகள், மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுவது.
2. கல்வி அறிவு பெற்றவர்களுக்கு பிந்தைய நடவடிக்கைகளுக்கு தேவையானவற்றை வழங்குவது.
3. வயது வந்தோர்க்கான கல்வி இயக்கமானது தேசிய வயது வந்தோர்க்கான கல்வி திட்டத்தின் மையமாக செயல்படுகிறது.

**தேசிய கல்வி இயக்கம்:** **5 – May – 1988.**

1. 15 வயது முதல் 35 வயது வரை உள்ள கல்வி அறிவற்றவர்களுக்கு செயல்பாட்டு கல்வியை வழங்குவதற்கான ஒரு தொழில்நுட்ப இயக்கமாகும்.
2. தேசிய கல்வி கொள்கையில் கல்வி அறிவின்மையை நீக்கும் கருவிகளில் ஒன்றாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது.
3. 1980 இல் நடைபெற்ற எர்ணாகுளம் கல்வி பிரச்சாரம் ஆனது இந்த இயக்கத்தினை எவ்வாறு நடைமுறைபடுத்தப்பட வேண்டும் என்ற வழிமுறையை கொடுத்துள்ளது.
4. இந்த இயக்கமானது கல்வி அறிவு தவிர குடும்ப நலம், நோய் தடுப்பு, தாய் சேய் நலம் மற்றும் சுற்றுசூழல்
5. பாதுகாப்பு ஆகியவற்றை பற்றிய அறிவையும் பரப்புகிறது.

**நோக்கம்:**

1. 15 முதல் 35 வயது வரை உள்ள குழுவில் 80 மில்லியன் படிப்பற்றவர்களுக்கு செயல்பாட்டு கல்வியை அளித்தல் அதில் 30 மில்லியன் மக்களுக்கு 19990 க்குள்ளும் மீதி 50 மில்லியன் மக்களுக்கு 1995 குள்ளும் வழங்குவது.
2. நீடித்த கல்வி வளர்ச்சி விகிதத்தை 75% 20க்குள் அடைவது.
3. முறைசாராகல்வி திட்டங்கள் செயல்படுத்தப்படாத இடங்களில் (9 முதல் 14) வரையிலான சூழலில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி வழங்குவது.
4. பெண்கள், தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர் உண்டான கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பது.
5. முழு கல்வி அறிவுத் திட்டம் மற்றும் கலவி அறிவு பிந்தைய நடவடிக்கைகளான திட்டங்கள் வெற்றிகரமாக நீடித்த கல்வியனை உறுதி செய்வது.

**முழுக்கல்வியறிவு இயக்கம்:**

தேசிய கல்வி அறிவு இயக்கத்தில் கல்வியின்மையை களைவதற்கான ஒரு முக்கியமான திட்டம் முழுகல்வியறிவு இயக்கமாகும்.

**பண்புகள்:**

1. குறிப்பிட்ட இலக்குகளை சார்ந்தது
2. காலக்கெடு உள்ளது
3. மக்கள் பங்கெடுப்பு உள்ளது.
4. தன்னார்வ அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படுவது.
5. சரியான முறையில் செலவினங்கள் மேற்கொள்வது.
6. வெளிப்பாடு சார்ந்தது.
7. இத்திட்டமானது முடிவு செய்யப்பட்ட அளவிலான கல்வியறிவு மற்றும் எண்ணிக்கையை அடைவதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**இயக்கத்தோடு தொடர்புடைய பிறநடவடிக்கைகள்:**

1. அனைவரும் பள்ளிகளில் இணைத்தல் மற்றும் தக்கவைத்தல்
2. நோய் தடுப்பு முறைகள்
3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
4. சிறிய குடும்பத்தின் நன்மைகளை எடுத்துரைப்பது.
5. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது.

**காலவரம்பு:**

12- 18 மாதங்கள்

**மேலாண்மை அமைப்புகள்:**

1. மாவட்டம் (அ) கிராம அளவில் - ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குழு.
2. திட்டம் சார்ந்த துணைக்குழுக்கள்.
3. மாவட்ட மற்றும் வட்ட அளவிலான நிர்வாகம்.
4. இந்த இயக்கமானது மாவட்ட ஆட்சியாளர்களை தலைமை ஆக கொண்டு ஜில்லா சக்ச்தாரா சமிதி என்பதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**நிதி உதவி:**

| | மத்திய அரசு | | மாநில அரசு | |
|---|---|---|---|---|
| 1. சாதாரண மாவட்டம் | 66 ½ % | 33 ½ | 2% | 1 |
| 2. பழங்குடியினர் துணைத்திட்டம் நடைமுறையில் உள்ள மாவட்டங்கள் | 4 | 1 | 80% | 20% |

**கல்வியறிவிற்கு பிந்தைய திட்டங்கள்**

முழு கல்வியறிவு இயக்கத்திற்கு பிறகு இடத்திட்டமானது ஜில்லா சக்தாரா சந்தியால் ஒரு வருடத்திற்கு அளிக்கப்படுகிறது.

**நோக்கங்கள்:**

1. கல்விதிறனின் பயன்பாடுகளை நவீனக் கல்வியறிவு பெற்றவர்களுக்கு புரிந்து கொள்ள வழிவகை செய்கிறது.
2. கல்வியை வாழ்க்கை நடைமுறைக்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பது.
3. திட்டத்தின் செயல்பாடு (ம) விழிப்புணர்வு தொடர்பான கூறுகளை விளக்குவது.
4. முழுக்கல்வியறிவு திட்டத்திற்கும், கல்வி அறிவு பிந்தைய திட்டத்திற்கும் நேர, இடைவெளி கிடையாது.
5. கல்வி திறனை ஒன்று சேர்த்தல், பயிற்சியாளர்களை தக்க வைத்தல் மற்றும் அவர்களுக்கு மாற்று கல்விமுறையை வழங்குவது.
6. பயிற்சியாளர்களுக்கு நிலைக்கு ஒரு ஆயத்த பயிற்சி ஆகும் காலவரம்பு - 1 வருடம்.

**தொடர் கல்வித்திட்டம் தொடக்கம்**

1. டிசம்பர் 1995ல் நவின கல்வி அறிவு பெற்றவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது.
2. 1999ல் இதன் நோக்கம் மற்றும் உள்ளடக்கமானது விரிவுப்படுத்தப்பட்டது.
    - இத்திட்டமானது தொடர்நிலைக் கல்வி மையம் மூலமாக நிலங்கள், படிப்பு அறைகள், பயிற்சி மையங்கள், தகவல் மையங்கள் ஆகியவற்றை அமைப்பதில் நோக்கமாக கொண்டது.
    - 2000 மதல் 2500 வரை மக்கள்தொகை கொண்ட இடங்களுக்கு ஒரு தொடர்கல்வி மையம் ஏற்படுத்தப்பட வேண்டும்.
    - 10 முதல் 15 மையங்களை உள்ளடக்கிய குழுக்களை கண்காணிப்பதற்காக ஒரு மைய தொடர்நிலை மையம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.
3. பயிற்சியாளர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்க்கு புதிய மற்றும் மாற்றும் அணுகுமுறைகளை நடைமுறைபடுத்த திட்டம் இயற்றுவது.
4. இது குறிப்பிட்ட குழுக்களுக்கு பயனுடையதாக அமைய பின்வரும் இலக்குகளை உள்ளடக்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது.
    - சமமான நிலைக்கான திட்டம்
    - வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்வதற்கான திட்டங்கள்
    - வருமானத்தை உயர்த்தி கொள்வதற்கான திட்டங்கள் தனிநபரின் விருப்பத்தை மேம்படுத்தி கொள்வதற்கான திட்டங்கள்

**நடைமுறைப்படத்தப்படும் அதிகார அமைப்பு:**

மாவட்ட, வட்ட மற்றும் கிராம் பஞ்சாயத்து அமைப்புகளுடன் இணைந்து ஜில்லா சக்ஸ்தாராசமிதி உடன் இணைந்து இதை நடைமுறைப்படுத்துகிறது.

**நிதி அமைப்பு:**

தொடர்கல்வி மையங்களுக்கு - தொடர்ச்சியான

1. தொடர்ச்சியற்ற ஆண்டு நிதியுதவியாக ரூ.25,000ம், மைய தொடர்நிலை கல்வி மையத்திற்கு ரூ.45,000 வழங்கப்படுகிறது.
2. இதில் முதல் 3 வருடங்களுக்கு 3% விழுக்காடு - மத்திய அரசு
    - 4 to 5 வருடங்களுக்கு 50:50 மத்திய, மாநில அரசுகளாலும்.
    - 5 வருடங்களுக்கு மேல் மாநில அரசாலும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**பெண்களின் கல்விக்கு தேசிய கல்வி இயக்கத்தின் பங்கு:**

1. பெண்களுக்கு தேவைப்படும் தகவல்சார், அறிவு மற்றும் அதிகாரம் பெறுவது ஆகியவற்றை தாங்களாகவே நிறைவு செய்து கொள்ளும் சூழலை உருவாக்கி கொள்வது.
2. பெண்களுக்கு குழுக்கள் முயற்சியின் மேல் உள்ள நம்பிக்கையை கற்பித்தல்.
3. பெண்களுக்கு கல்வி அறிவு அளிப்பதே அவர்களுக்கு எதிரான கொடுமைகளை கலைவதற்கான முதல் நிலை என்ற சூழலை உருவாக்கி உள்ளது.
4. இது பெண் கல்வியை பின்வருவனற்றின் மூலம் உயர்த்தும் நோக்கம் கொண்டது.
   - சமூக விழிப்புணர்வு
   - பள்ளிக்கூடங்களில் சேர்க்கை
   - தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைதிறன் அதிகாரம் அளித்தல்
   - பெண் தொழில் முனைவோர்
   - சிறுசேமிப்பு (ம) கடன் வசதிகளுக்கான வழி வகைகள்
   - உடல்நலம் மற்றும் தூய்மை.

**கல்விக் குழுக்கள்**

- பல்கலைக்கழக மானியக் குழு -1948 (ராதா கிருஷ்ணன் தலைமை)
- இடைநிலைக் கல்விக் குழு - 1953 (டாக்டர், இலட்சுமண முதலியார்)
- தேசிய கல்விக் குழு - 1968 (டி. எஸ் கோத்தாரி தலைமை)
- (10+2 பன்னிரெண்டாம் வகுப்பு கல்வி முறையை பரிந்துரைத்தது.)
- தேசிய கல்விக் கொள்கை - 1986
- குறைந்த பட்ச கற்றல் திட்டம் - 1991
- கரும்பலகைத் திட்டம் - 1992

**கோத்தாரி கமிட்டி:**

1. கோத்தாரி கல்விக்குழு என்றழைக்கப்படும் இந்தியக் கல்விக்குழு (1964-1966) இந்திய அரசால் உருவாக்கப்பட்ட சிறப்புக்குழுவாகும்.
2. பொதுப்படையான கல்வித் திட்டத்தைக் கொண்டுவர, இந்தியக் கல்வித் துறையில் அனைத்து வகையிலும் ஆய்வு மேற்கொண்டது.

3. இந்தியாவின் கல்வி முன்னேற்றத்திற்கான ஆலோசனைகள் வழிமுறைகள் மற்றும் கொள்கைகளை வழங்கியது.
4. தவுலத் சிங் கோத்தாரி தலைமையில் ஜூலை 14, 1964இல் இக்குழு அமைக்கப்பட்டது.
5. தொடக்கப்பள்ளி முதல் உயர்நிலைக் கல்வி வரை கல்வி வளர்ச்சி குறித்த பொதுவான கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் வடிவமைக்கப்பட்டது.
6. 1964ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கோத்தாரி கல்விக்குழு
7. 1966ஆம் ஆண்டு ஜுன் 29ல் அளித்த அறிக்கையின்படி
8. 1968ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை கொண்டு வரப்பட்டது.

**இலட்சுமண முதலியார் குழு:**

1. 1952 செப்டம்பர் 23 தேதியில் இடைநிலைக்கல்வி இந்திய அரசால் அமைக்கப்பட்டது.
2. சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் இலட்சுமண முதலியார் தலைமையில் இடைநிலைக் கல்வியைப் பற்றி ஆராய.

**நோக்கம்:**

1. ஜனநாயகக் குடியுரிமையை மேம்படுத்துதல்
2. ஆளுமை மேம்பாடு
3. தலைமைத்துவத்திற்கான கல்வி
4. தொழிற்கல்வி ஆற்றலை முன்னேற்றுவது.
5. அனுபவ முழுமையான பாடத்திட்ட உருவாக்கம்
6. சமூக வாழ்வோடு தொடர்பு
7. ஓய்வுக்குப் பயிற்சி

**கல்விக்கான செயற்கைக்கோள் (EDUSAT)**

1. ஜிசாட்-3 என்பது ஒரு கல்விச் செயற்கைக்கோளாகும். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் செப்படம்பர் 20, 2004 அன்று விண்ணில் ஏவப்பட்ட தகவல் தொடர்பு செயற்கைக்கோளாகும்.
2. கல்வித்துறைக்காகவே பணியாற்ற உருவாக்கப்பட்டட முதல் செயற்கைக்கோள் எடுசாட் (EDUSAT) ஆகும்.
3. இது நாட்டின் விவாத நோக்கினை, செயற்கைக்கோள் அடிப்படையிலான தொலைநிலைக் கல்வியின் தேவைக்காக உருவாக்கப்பட்டதாகும்.

**தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி அமைப்பு:**

1. டெல்லியை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்திய அரசின் அமைப்பு தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி அமைப்பாகும்.
2. பள்ளிக்கல்வி தொடர்பாக மத்திய மாநில அரசுகளுக்கு அறிவுரை வழங்குவது மற்றும் உதவியாக இருப்பதே இதன் பணிகளாகும்.
3. இது 1961ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**கொள்கைகள்:**

1. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி
2. தொழில்நுட்பக் கல்வி
3. சிறப்புத் தேவைக்காக கல்விக் குழுக்கள்
4. குழந்தையின் ஆரம்பக் கல்வி

**வினாக்கள்:**

1. எழுத்தறிவிற்கான காரணங்கள் மற்றும் தாக்கத்தினை விவரிக்க.
2. எழுத்தறிவின்மையை குறைப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் யாவை?